உ

சிவமயம்.

ஆத்மநாமம்

பஞ்சகோசம்

ஞானவந்தாதி

ஏதுசொரூபங்காரியம்.

———:o:———

இவை

சமிவனச்சேத்திரமாகிய

கோவிலூரென்னுஞ்

சிவஸ்தலத்தின்கணெழுந்தருளியிருந்த

பிரமானந்தசொரூபராகிய

முத்துராமலிங்கசுவாமிகளது

மாணாக்கர்களிலொருவராகிய

கண்டநல்லூர்

நாகலிங்கசுவாமிகளால்

திருவாய்மலர்ந்தருளப்பட்டு,

சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

தாத்ரு௵ கார்த்திகை௴.

சிவமயம்.

ஆத்மநாமம்.

செல்வவிநாயகர் துதி.

ஆரணங்களடிக்கடிதான் கூறுகின்ற வாத்மாவினுமமதி னருத்தந்தன்னைத், தாரணமதானபெரி யோர்கள்வாக்காற் சாற்றினதைத்தமிழ்க்கவியாய்ச் செய்வதற்குப், பூரணமதாகின்ற சிற்சொருபப் பொருவரியநித்தசுத்த புத்தமான, சீரிணங்குசெல்வவிநாயகனைநாளுஞ் சேவித்துமனமதனிற் சிந்தைசெய்வாம்.

சுந்தரேசுரர் துதி.

சந்திரன்வானம்வாயு தாரணிகனல்சலத்தோ
டந்தமில்கனலிபூமா னுகியவெட்டுமாகிச்
சிந்தைசெயவையலாத சிதானந்தவடிவமான
சுந்தரேஸ்வரனற்பாதந் துதித்துமேதியானஞ்செய்வாம்.

மீனும்பிகை துதி. வேறு.

சேனுலாவியதேவர்மூவர்க ேடேடிடற்கரிதானவ
டானுவாகியசுந்தரேசர் சீரம்பாதியுடையவள்
வாணிலக்குமிதேவகன்னியர் வாழ்த்திடும்படிமூர்த்தமாய்க்
காணவந்திடுமீனலோசனி கழல்களுடிவணங்குவாம். (௩)

கற்பகவிநாயகர் துதி. வேறு.

ஒப்பரியவேதாங்க ளோதுபொருளாயுஞ்
சிற்பிரமமானவர்கள் சிந்தைசெய்வதாயுந்
தப்பில்பரிபூரண சதானந்தவடிவாங்
கற்பகவிநாயகன் கழல்கடுதிசெய்வாம். (௪)

சுப்பிரமணியர் துதி. வேறு.

சந்திரசடாமௌலி தன்னுடையசெவியிற் றற்பிரமவுபதேச மற்புதமதாகப், புந்தியிலுறப்புரியு மந்தவடிவேலோய் போத வடிவானவடி யார்களிருதயமே, சொந்தமெனவந்துகுடி கொண்டுபவமாறச் சொருபசுகமருளியிடு தோகைமயிலுடையோ, யெந்தமதுசிந்தைமய நீரவருள்புரிவா யெழுவாரிதனில்வே லையேவியிடுவோனே. (ரு)

நடராசர் துதி. வேறு.

கானனமயானந்தன்னிற் கருதருநடனஞ்செய்து
வானமர்மன்றுளம்மை மகிழ்ந்திடவாடிக்காலை
மீனவன்றனக்காய்மாறி வெள்ளிமன்றதனுளாடு
மானந்தநடனன்பாத மனுதினந்தொழுதல்செய்வாம். (சு)

தெக்ஷிணாமூர்த்தி துதி.

சனகாதிநால்வர்க்காகச் சச்சிதானந்தசோதி
கனமானவருளினாலே கவின்பெறுவடிவதாகி
யனகமாகித்தசுத்த வறிவினைமௌனமாகத்
தினமுமேயிருந்துகாட்டுந் தெக்ஷிணாமூர்த்திபோற்றி. (எ)

வைரவர் துதி.

கருப்புவில்லுடையோனாலே கருதியமாதர்கொங்கை
விருப்பமதொழிந்தேயுன்னை விடவொருபொருளில்லென்று
மருட்பெறுநிச்சயத்தை யடைந்திடக்கிருபைசெய்வாய்
தெருட்படுவடிவாய்நின்ற சித்தனேபோற்றிபோற்றி. (அ)

குருவணக்கம். வேறு.

சுத்தசத்துவ தூயவொளிமிகுஞ்
சத்துசித்தொடு சாக்ஷியுமானவன்

பத்தருக்கருள் செய்பவனாகிய
முத்துராம முதல்வனைப்போற்றுவாம். (௯)

அவையடக்கம். வேறு.

தவமுளோர்புகழ்வதாந் தேனாறுபாய்ந்துவளர் சமிவனச் சேத்திரத்திற் - சார்கின்றராசகட் கேசபரமேஸ்வரன் சாலிவா டீஸ்பரியையு, நவமாகவனவரத மனதினிற்குடிகொண்ட ஞானவடி வானமுத்து - ராமலிங்கக்குரு பாதமலரெந்நாளு நாடியே ஞானவடிவாஞ், சிவரூபமானவரு ணாசலசுவாமிகள் செய்யான்ம நாமவுரையைத் - தெளிவுபெறநாயினேன் றமிழ்க்கவியதாகவே செய்வதிற் குற்றமுளதேற், கவர்வுறுதலன்றியே குணமானபொருளையுங் கருதிச் சிறப்பிதென்று - கனமானவன்பினைச் செய்திடுவர்பெரியோர்கள் காசினியி லெந்நாளுமே. (௧௦)

பாயிர முற்றிற்று.

நித்தியம்.

மன்னும்பிராகாபாவமுதன்மருவுநான்குங்கடமதனுக்
குன்னிலென்றுமிருந்துமவையுயர்மண்ணதனுக்கிலாததுபோ
லன்னகோசமைந்தினுக்கு மபாவநான்குமிருத்தலினாற்
சொன்னவபாவங்களிலொன்றுந்தொடராவான்மாநித்தியமே

பூரணம்.

ஒருதேசமொருதேசத்து மொருகாலமொருகாலத்தும்
வருமொருவஸ்தில்வஸ்து மருவுவதிலைபோலின்றிப்
பொருமெலாத்தேசத்தேயும் புகலுமெக்காலத்தேயு
நிரைவஸ்துவெலாமுமான்மா நிறைவதாற்புரணமாமே. (௧௨)

ஏகம்.

நாட்டமாணகடகலச நாநாவாயுமண்ணென்றும்
வேட்டுகடகமகுடாதி வெவ்வேருயும்பொன்னென்று
மீட்டிவாலாவாள்பலவா யிருந்துமயமொன்றுமவைபோற்
றேட்டுபிரமம்பரசீவ செகங்களாயினும்மேகம். (கங)

பரமார்த்தம். வேறு.

சுத்திவெள்ளிபொய் சுத்திசத்தியஞ் சொல்வபோலவே சொற்பனத்தினிற் - றோன்றுமியாவையுஞ் சுத்தமித்தையே துதிகொள்சாக்கிரந் தோன்றும்வஸ்தெலாஞ், சத்ததாமதின் மேகமாதிபொய் தாரம்புத்திரன் சரீரமுண்மையாங் - தங்குமிவைபொய்வா னுலகமாதிகள் சத்ததாமவை யசத்ததாமதி, னித்தமாகுமே பிரமலோகங்க ணேர்ந்தசெகபர சீவர்தோற்றியே - நிலையிலாதழி வாகிவார்த்தையாய் நிற்பதாலசத் தாகுமாதலாற், சித்ததாமது பிறப்பிறப்பையுஞ் சேர்ந்திடாதவை தோற்றன்மூலமாய்ச் - செறிதலாற்பர மார்த்தமாயுமேற் றெய்வமில்பரமார்த்தமாகுமே. (கச)

பரப்பிரமம். வேறு.

உன்னுபசுவும்பிரணவமு முயர்வாம்வேதம்பிராமணரு
மன்னுபிரமன்முதறேவர் மகத்தாம்பிரமமறுவகையுட்
சொன்னமேலாஞ்சத்தியசிற் சுகமாம்பிரமசொரூபமதை
யன்னவேதம்பரப்பிரம மாகுமெனவேயறைந்திடுமே. (கரு)

நிதானம்.

சீவர்கள்செகங்களீசன் றிகழுமூவகைக்குமூல
மாவதுபிரதானந்தா னதற்குமேமூலமான
பாவனைக்கெட்டாவான்மாப் பகராதிகாரணத்தான்
மேவியநிதானமென்று விளம்பினர்பெரியோர்தாமே. (கசா)

சாந்தம். வேறு.

காட்டமதிற்செனித்தகனல் காட்டமதைச்சுட்டுக் காட்டமுடனக்கனலுங் கழிவ்துவேபோலச், சாட்டுபிரகிருதிபுமான்சையோகத்தாலுஞ் சாத்திரத்தின்விவேகமதாற் றருமகண்டாகார, நாட்டமதாஞானந்தான் பிரமத்தின்வேருய் நவிலுபிரகிருதிபுமான் சாத்திரமுஞ்சுட்டு, வீட்டுவதாந்தானுமே பிரமத்தினசித்து வேறுபடாநிற்சகமா யமைவதனுற்சாந்தம். (கஎ)

சத்தியம். வேறு.

தினந்திங்கள்வருடந்தோறுஞ் செறியுகங்கற்பந்தோறும்
வனமானகோசமைந்தும் வருவதன்முன்னும்பின்னுங்
கனமுளசமமாய்மெய்யாய்க் காண்கின்றவொருபடித்தா
யனகமாயிருக்குமான்மா வழிவில்சத்தியமாமன்றே. (கஅ)

கேவலம். வேறு.

வானஞ்சாதுர்ப்பூதமதின் மருவாமற்றனிருப்பதுபோ
லானமூலப்பிரகிருதி யதன்காரியமாம்பிரபஞ்சம்
மானசிருட்டிதிதியழிவின் மருவலின்றித்தனித்தோனய்
ஞானவான்மாவிருத்தலினு னன்மையானகேவலமே. (கசு)

துரியம்.

நனவுகனவுசுழுத்திதனினுளும் விளங்குந்தூலமுடன்
வினவுசூக்கங்காரணமாம் விசுவமல்லாதான்மாவுந்
தினமுமவையெல்லாமறியுஞ் சித்தேவடிவாயிருத்தலினற்
கனமாந்துரியமாகுமெனக் கழறுகின்றவேதமெலாம். (உ0)

சமம். வேறு.

தாரதன்மியமான பூலோகமுதலான சகலவித வுலகத்தினுஞ் - சார்கின்றவுத்தமமு மத்திமமு மதன்மமாய்த் தங்குபிரமா

சாரமறுதம்பாந்த மானசரீரத்திலுந் தயங்குபா மரன்
ங் - தயவானவுபாசகன் யோகிஞானிகளென்று சாரு
ரிலுமேலும், பாரதனிலவையேக தேசமெனவுடைய
பகர்சிவ பேதமதினும் - பங்கயன்முதலான வீஸ்வர
ளாம் பலதார தன்மியத்துஞ், சீரணமிலாதுசத் தாகா
கார தன்மியஞ் சிறிதுமின்றித் - திருக்குவடிவாய்நா
ரமாவிருத்தலிற் றிகழுசம மென்னலாமே. (உக)

திருக்கு. வேறு.

பங்களாய்விளங்குந் தேகமுடன்பொறிக - டிகழுயிர்க
ப்புத்தி யவித்தையுடன்சிவன், விரிபஞ்சவிடயமதை ய
கான்மாவாய் விளங்கிடினுமேயவைகள் சுயமறிவிலா
பிரிவானவுற்பத்தி நாசமுடைத்தாகிப் பெரிதானவான்
லாதவிவைகட்குத், தெரிவுடையவதிட்டான மாயிவை
கல் செனித்திறத்தலறியான்மாத் திருக்குவடிவாமே.()

கூடத்தர். வேறு.

னைடைகளு நிருவிகாரமாய் மன்னுமயமுடை விகாரம்
-வந்தடங்கிட மூலமாதல்போல் வருவிகாரமில் பிரம
ற், றனுவின்மூலமாஞ் சத்திவரவதின் சாத்திகாதியா
ங்கண்மூன்றினுற் - றருவவீசனுஞ் சிவன்பூதங்க டந்த
ந் தன்றன்றொழில்வழி, புனிதமாகவே சென்றடங்கி
ருந்துகின்றதாம் பிரமவஸ்துவும் - போதரூபமாய் மூ
ம் புகலுரகசிய வஸ்துவாகவுந், தனியதானசற் குணத்
பிற் றயங்குகின்றதோர் பொருளதாகவுந் - தானிருந்த
டங்களுந் தகைமையானகூ டத்தரென்பவே. (உஉ)

சாட்சி.

கமதின் றொழில்கள்செய்யவே தபனன்சந்நிதி மூல
ந் - சண்டனவைகளிற் பற்றதின்றியே சாட்சியாக

வே தானிருத்தல்போற், புகலுமான்மசந் நிதியடைந்துமே பொறிகள்சகலமுந் தொழில்கள்செய்யவும்-போதரூபமுந் தானேயாய்ப்பிர விர்த்திநிவிர்த்திகள் செய்தலின்றியே, யகலுமொன்றினுற் செய்வதின்றியே யவைகளுக்கெலா மத்தியஸ்தமா - யமர்ந்துபார்த்துமே தோற்றிவைக்குத லானமாத்திரம் வடிவதாகியும், விகலமின்றிய சான்றதாகவும் விளங்குகின்றதால் வேதமானவை - விரிவதாகவே யான்மவஸ்துவை விளம்புகின்றது சாட்சியென்னவே. (உச)

போதம். வேறு.

வினவியமுப்பத்தைந்தாய் விளங்குறுதத்துவங்கள்
சொனவதனதனதான தொழிலையும்விளக்கிவைத்தே
யனகமாஞானவான்மா வறிந்துகொண்டிருப்பதாலே
மனமதிற்போதமென்று மதித்தனர்பெரியோர்தாமே. (உரு)

சுத்தம். வேறு.

சாதிவன்னவாச் சிரமபுண்ணியந் தயங்குபாவமுஞ் சொற்கநரகமுந் - தருவபிறப்பிறப் பாதியசுத்தமே தங்குகின்றதோர் சீவர்தங்களு, மோதுமிராகவன் கிருஷ்ணனாதியா மொப்பிலாவவ தாரங்கிர்பையு - மோயுமாச்சரி யாதியசுத்தமு முடையவீசனு முதிப்பிறப்புக, ளாதியாய்வரும சுத்தமுள்ளதா மைந்துபூதமு மானவிவைகளுக் - கனியமாயிருந் தவைகளோடுமே யமர்ந்துநிற்கினும சுத்தமின்றியே, சோதிநித்திய மாகநிறைவதாய்ச் சொருபமாவது வொன்றுமின்றிய - சுயஞ்சைதன்னியவான்மரூபமுந் தூயதாதலிற் சுத்தமென்பதே. (உசு)

இலக்கியம். வேறு.

தற்பதவாச்சியமாகும் விராட்டாதிசரீரந் தருகின்றசிருட்டிமுத லாமவத்தைமூன்றும், பொற்புடையவைசுவா னாதி

ப் பொருந்துகின்றநவவிதமுந் துவம்பதவாச்சியமா,
ந்தூலாதி சரீரங்கண்மூன்று முறவானவபிமானி வி
நன்மூன்று, மற்புதசாக்கிரமாதி யவத்தைகண்மூவித
கியமாமான்மாவே விசேடமதாலிலக்கியம். (உஎ)

சஞ்ஞதனம்.

யென்றுநிச்சயித்த சோபாதிகன்ம மஞ்ஞானம்வேத
வனுமீசுரனுந், தனதுநிருபாதிகசை தன்னியமாம்பி
மவையுட்கற்பிதவ ஞ்ஞதியைந்தாமிவைக்கு, வினமா
ண்டா மவைக்கதிட்டானமதா யிருக்கின்றபிரமமது
வின்றித், தினமுமேயஞ்ஞதியா யிருத்தலினுல்வேதஞ்
னசஞ்ஞதனமென் றுரைக்குமெனவறியே. (உஅ)

சீவன். வேறு.

சரீரமாதி யுலகங்கணசித்தபோதும்
வவைகள்போலப் பழுதுறநசியாதாகிச்
லான்மாநாளுஞ் சீவித்தேயிருப்பதாலே
சீவனென்று மதித்ததுவேதமெல்லாம். (உகூ)

தத்துவம். வேறு.

மமதையறியும்வனை தத்துவமென்றிருக்குந் தூலவுட
பூதமவையைந்தா, மருவுகின்றசூக்கவுட லிருபதுவா
மாயையுடனவித்தைபொரு வீசனிவைநான்காம்,
ராமையேழு மொருகாற்றத்துவமாய் வருமொருகால
ாய் வருமிவைபோலின்றி, யொருபடியாயுண்மையா
ந்துமான்மா வுறுவதனுற்றத்துவமென் றுரைப்பர்கண்
ோ. (௩௦)

விண். வேறு.

மமாய்நிரவயமா யமூர்த்தமாகிச்சரீரமுதற்
சுத்தம்வனைசகத்துத் தோன்றிநின்றேயழியவிடந்

திதியாயளித்துவியாபகமாய்ச் சிதாகாசமதாயெப்போதுங்
கதியாமான்மாவிளங்குதலாற் கழறுமறைகள்விண்ணெனவே.

சோதி. வேறு.

சூரியனக்கினியுமின்னல் சோமனுமிந்தியகரணமுடன்
காரியசீவனுமாயையுடன் காரணவீசனுமிவைகளுடைப்
பெரியதோற்றந்திதிநாசம் பிரகாசிப்பித்தொன்றாலுந்
தூரியதானும்விளங்காமற் சுயம்பிரகாசமதாற்சோதி. (௧௨)

ஆன்மா. வேறு.

உண்மையாகவருமகவுதாரமுத லுறவரானபூதாதிக - ளோ
தூநாமமது வேறதாய்த்தனது வுருவமின்றிவே றுறுவபோற்,
றண்மையாகிமிக வேறுருதபடி தானதாயதே காதிக - டன்
னில்வேறுபட வென்னதென்னதென வேபுறம்புபடு தன்மை
போல், வண்மையானவிவை கட்கெலாமதித மாகியேதின மி
ருப்பதாய் - வருவிகாரமது வொன்றுமின்றியசை தன்யமாகி
யுள பிரமமுந், திண்மையானதன துருவமாகியொரு காலும்
வேறுபட லின்றியே - திகழ்தலாலதனை யான்மரூபமென வே
யுரைத்திடுவர் தேசுளோர். (௧௩)

முத்தம். வேறு.

பூமிகடனமுதல்வஸ்துகளும் புத்திரர்மித்திரர்காரிகையுங்
காமியதேகமுமிந்தியமுங் கரணஞ்சீவபிராணனுமே
நேமியிலொருகாற்பிரியமதா நிகழொருகாலப்பிரியமதா
மேமமிலான்மாவதுவில்லா தென்றும்பிரியமதான்முத்தம். ()

விபு. வேறு.

ஒன்றுமேலொன்றுவியா பகமாகியிருக்கு முறுமவித்தைவி
சிட்டன்சூக் குமந்தூலதேக, மன்றுவருதூலபஞ்ச பூதம்பொ
ன்கற்ப மவ்வியாகிருதமவ் வியத்தமுடன்சுத்தம், பொன்றுமா

யாவிசிட்ட னிவனிலுமேவிரிந்து பொருமிவையையவியாபித்துச் சிதானந்தமாகிக், குன்றுதவதற்குமேல் வியாபகமிலாது குறையாதவியாபகமா யிருத்தலினால்விபுவாம். (௩௫)

சூக்குமம். வேறு.

சூட்சுமமாம்பரமாணு வதிலேகோடி தொகையிலொருபங் குகன மில்லாதாகி, யாச்சரியமாமிந்தி யங்களாறு மறியாதஞா னவடி வாகிநாளுஞ், சாட்சிவடிவாமான்மா நுண்மையாகித் தானுமேயிருத்தலினாற் சூக்கமாகுங், காட்சியதாம்வேதம்விதி குணங்களாகக் கழறுகின்றநாமமிரு பத்தாறுமே. (௩௬)

அசலன். வேறு.

தூலஞ்சூக்குமகாரணமாய்ச் சொல்லியதேகஞ்சீவனுடன்
பாலனபஞ்சபூதமதும் பௌதிகசமட்டியுமாயையுறு
மாலமரீசனுமாமிவைக ளசைந்திடத்தானமுஞ்சாட்சியுமாய்க்
கோலமிலான்மாவசைவறவே கோதறநிற்றலினாலசலன். ௩௭)

நிரஞ்சனன். வேறு.

சலமதுமூழ்கினவன்பேரிற் சலம்பற்றுதல்போற்பற்றின்றி
நிலவியசகமதினுள்வெளியு நிறைவாகியதனின்மூழ்கியதாஞ்
சொலவாந்தூலசரீரமுதற் சுத்தம்வரைப்பிரபஞ்சத்தி
னலமாம்வான்போற்பற்றற்று நாளுமிருத்தனிரஞ்சனமே. ()

அமிர்தன்.

நிகழ்வுறுயோகாவமிர்தமது நிகரறுதேவாவமிர்தமதும் [த்
பகரொருகாலழிவாவதுபோற் பலமுளமோக்ஷாவமிர்தம்தாய்
திகழ்வுறுமான்மாவொருகாலுஞ் செறியழிவின்றியிருத்தலினா
லகமகிழ்முனிவர்களனைவோரு மமிர்தமதாகுமறியென்றார்.()

அப்பிரமேயன்.

ஐயறிவறியைம்புலனுக்கு மந்தக்கரணஞானமதாற்
செய்யறியிந்தியமுதலாகத் திகழீசன்வரைக்கன்னியமா
யுய்யுஞ்சற்சிற்சுகமதுவா யுள்வெளியிந்தியமறிபொருளாய்
நையுறுமவையாலறிவற்று நன்குறலாலப்பிரமேயன். (சய)

விமலன். வேறு.

குப்பைசேறுமல மூத்திரங்கணுரை குமிளிபுகைபுழுதி முதலதாய்க் - கூறுமலமுடைய பஞ்சபூதமது கோழைபித்தசீ ரத்தமாய்ச், செப்புமலமுடைய தூலதேகமதுஞ் செவிடூமைகுரு டதுவுடன் - திகழுகாமமுதல் காசபடலமல நிகழுஞ்சூக்குமதேகமு, மொப்பின்ஞானவஞ் ஞானமலமுடைய வோதவித்தைசம் பந்தரு - மோதுசீவர்தமை யாளவேதயவு முற்றுமுத்தொழிலு மதுவுடன், றப்பிலாதசன ஞதிமலமுடைய தங்குமாயையுடை யவருமாய்த் - தயங்குமிவைகளுக் கனியமாகிய வை சார்ந்துமலமிலதின் விமலனே. (சக)

அனுபாதேயம். வேறு.

சொற்கசுகம்வேண்டியே கன்மகாண்டங்களிற் சொல்சா தனங்களான சுழுவிலாநித்தியநை மித்யகாமியமுடன் றுலங்கவரு பிராய்ச்சித்தமாய்ச் - சொல்கின்றநால்வகைக் கருமமுஞ் சாங்கமாய்த் தொடர்புட னனுட்டித்தவன் சுதமானசொற்கபல போகமதையடைகுவன் சொல்கின்ற மோட்சார்த்தமாய்ப், பொற்புடையசிவனுதி தேவரைக்குறித்துப தேசமாய்த் தீட்சையாதி புகழ்வானமந்த்ரதந் திரயெந்தரங்களைப் பொருளதாய்ப் பெற்றுமவர்கள் - புகல்கின்றபடிசெபந் தியானதோத்திரமுடன் பூசைதர்ப்பணமர்ச்சனை போசனமுதலானபத்திகாண்டத்தினிற் புகல்சா தனங்களெல்லாம், விற்பனமதாயொழுங் காகவேவெகுகாலம் வேண்டுமென் றற்பசித்தோன் வியப்பா

னநால்வகைச் சாலோகமாதிகளின் மெய்யிலா முத்தியொன் றை - மேன்மையுடனடைகுவன் சுயமானமுத்தியது வேண் டுமென் றுசையுற்றே மேலானசாதன சதுட்டையமடைந்து மே மிகுஞான காண்டமதனி, லற்புதமதாய்ச்சொலுஞ் சாத னமதாஞ்சிர வணமாதி சாவதான மாகவெகுநாள னுட்டித்த வர்பிரதி பந்தம தொழிந்தவுடனே - யாகின்றமோட்சவடி வா ஞ்சச்சிதான்மாவு மக்கரும பத்திதன்னு லடைபொருள்கள் போலின்றி யடைவதற்கெட்டாத தாலானு பாதேயமே. (சஉ)

அசடம். வேறு.

அறிவதிலாச்சடவடிவாய்த் தோன்றுநின்ற வளவிலாச்சகங் களையு மியற்கையற்றுப், பிறிவானசேற்கையறி வாகித்தோற் றும் பேறுடையமூன்றுவித சரீரந்தன்னைச், செறிவானவியற் கையறிவாகின்று தினந்தோறுங்காண்கின்ற சித்தாமான்மா ப், பொறியானசூரியன்போன் மூடமின்றிப் பொருந்துவதா லசடமெனப் புகலும்வேதம். (சந)

அனுமயன்.

தூலவுடல்வாதமுடன் பித்தசிலேற்பனமாய்த் தொடர்கின் றவியாதியுட னிடிகுடுமுறிச்சல், சீலமிலாப்பீடையுள தாஞ்சூ க்கதேகஞ் செறிகாமகோபலோ பாதிசுரமுளதாஞ், சாலகார ணதேகந் தூலசூக்குமமாஞ் சரீரமதைத்தருசுரமா மிவைகள் போலின்றி, யாலயமாஞ்சாட்சிநிரு பத்திரவனுகி யடர்நோயற் றிருத்தலினு லனுமயனுமன்றே. (சச)

அசங்கன். வேறு.

ஞானமிலாவஞ்ஞான காலந்தோறு ஞானம்வந்தபின்னு மூன் றவத்தைதன்னி, லானசகம்வரும்பொழுது கூடவாரா தவையிறக்கிற்றுனவையோ டிறவாதாகி, மானபொருளிவை

யாவுங் காணுநின்ற மகத்தானவறிவுவடி வாகிநின்றே, வான மதுபோற்றொடர்வற் றிருப்பதாலே வரமானவசங்கனென வ குத்தார்மேலோர். (சரு)

அதூலம். வேறு.

தூலஞ்சூக்கும காரணதேகமுஞ் சொல்விராட்டுப்பொன் க ர்ப்பமதுவுடன், கோலமாமவ்வி யாகிருதாதியுங் கூறுமாகா ர மாய்க்கனமாகியே, காலந்தோறு மிருப்பதுபோலின்றிக் காரணன்மா நிராகாரவஸ்துவாய்ச், சீலமாகக் கனமற்றிருந்த லிற் றெளிவதான வதூலமதாகுமே. (சசு)

நிரந்தரம். வேறு.

ஒன்றுக்கொன் றிடைவெளியா யிருக்கும்வஸ்தி லுளவானமி டைவெளியற் றிருத்தல்போலப், பொன்றுவதாமிடைவிட்டு மிருக்காகின்ற புகருடையச்ராசரமாம் பிரபஞ்சத்தி, னன்று ணபிரமவடி வானவான்மா நாடோறுமிடைவிடா திருப்பதா லே, யென்றுமேநிரந்தரமா மெனவேவேத மியம்புமெனப் பெரியோர்க ளிசைத்தாரன்றே. (சஎ)

அகோசரம்.

ஈரேழுவிதமான விந்தியங்கடானு மெப்போதுமறிகின்ற தூலஞ்சூக்குமமுங், காரணமாம்பிரபஞ்ச மவைகள்போலின் றிக் கலந்தவைகளன்னுவய விதிரேகந்தனையுந், தாரணமாய்க் காண்கின்ற சாட்சிவடிவான தானவைகளாலறியப் படாத பொருளதனாற், சீருடையவேதங்களகோசரமாமெனவே செ ப்புவதாலப்படியே தெளிவாய்நீமைந்தா. (சஅ)

அகண்டம். வேறு.

ஒன்றையொன்றுற்கண்டிக்கும் லோகசித்தாந்த மோரும தைக்கண்டிக்கு மருகன்கந்திருவர், பொன்றுதபிரமன்மா லீ

சனகமங்கள் புராணபாரதநீதி சாரமுடன்வேதத், தொன்று வதாங்கன்மபத்தி காண்டமதுமொன்றை யொன்றதனுற்கண் டிக்கு மவைகள்போலின்றி, நன்குகவுபநிடங்க ணிச்சயித்த வான்மா நாடோறுந்தள்ளுதலற் றிருத்தலினு லகண்டம். சகூ

அசம். வேறு.

மூர்த்தமுடனவையவமாய்க் கண்டமான மூன்றுவிததேக மதாம் பிரபஞ்சங்க, ளார்த்தல்செயுமுற்பவங்க ளடைவபோ ல வமூர்த்தமதாய்நிரவயமா யகண்டமான, நிர்த்தலிலாச்சொ ரூபமதா மான்மாநாளுந் திகழ்கின்றவுற்பத்தி முதலில்லாதாற், பார்க்கரியவசமெனவே யறையுமென்று பகர்ந்தனர்கண்மு னிவரெலாம் பண்பாய்த்தானே. (ருo

அனந்தம். வேறு.

சரீரவிந்தியங்களுக்குஞ் சாரந்தக்கரணங்கட்கும்
பரவுமைம்பூதங்கட்கும் பகர்மாயாவிசிட்டருக்குந்
தரமாகவந்தமுண்டாஞ் சாட்சிதானந்தமின்றி
யுரமதாய்முடிவில்லாதா லொப்பிலாவனந்தமாமே. (ருக)

அவிநாசி.

பிரளயம்பிராரத்தத்திற் பெறுஞானவுதயத்தன்னிற்
றிரமாகநாசமுண்டாந் திரிவிதசரீரங்கட்கும்
பரவுமான்மாவுமப்பாற் பட்டலட்சரமாய்நாளு
முரமாகவழிவில்லாதா லுறுமவிநாசியாமே. (ருஉ)

நிர்க்குணம். வேறு.

மூன்றுகுணத்தாற்சீவ பரசகங்கண் முழுதும்விரித்தடக்கிவி ளை யாடிநாளுந், தோன்றுவதாம்பிரகிருதிக் கப்பாற்பட்டுச் சொல்கின்றவவைக்கதிட்டா னமதேயாகிச், சான்றுவடிவாய

பரிச் சின்னமான சத்தியசிற்சுகவடிவா மான்மாவுந்தா, னீன்றலுடைமுக்குணமற் றிருப்பதாலே யெப்போதுநிர்க்குணமென் றியம்பும்வேதம். (ருக)

நிட்களம்.

தாமதத்தின்விகாரமதாஞ் சூக்குமபூதங்க டூூக்கலபூதமுடன் பௌதிகங்கடானு, மேமமிலாவிராசதத்தில் விசுவனுந்தைசதனு மியல்பானபிராஞ்ஞனெனுஞ் சீவகோடிகளுஞ், சேமமதாஞ்சத்துவத்திற் பிரமன்மாலரனுய்த் திகழீசனுமிவைகள் சகளமதாமதுபோ, னேமமதாஞ்சத்தியசிற் சுகமாகுமான்மா நிகழ்மூர்த்தமிலாததினு னிட்களமதாமே. (ருச)

நிரவயம். வேறு.

கரசரணுதியவையவமாகக் கருதியசரீரமூவகைக்கும், விரவுமன்னியமாயவத்தைமூன்றினுக்கும் விளங்கியசாட்சியாயிருக்கும், புரணமாமான்மாத்தனக்கெனவாயும் பொய்யதாஞ்சகமதைத்தொட்டும், பரவியரூபமற்றிருத்தலினுற் பகர்வதுநிரவயமெனவே. (ருரு)

அநாதி. வேறு.

ஆகங்கட்காதிபூத மவைக்காதிவிட்சேபந்தான்
பாகமாமவைக்குமாதி பரவியவவித்தைமாயை
மோகமாமிவைகட்கெல்லா முதலதாமாதியான்மா
யேகமாய்மற்றோராதி யிலாமையாலநாதியாமே. (ருசா)

அசரீரம். வேறு.

தேகங்களுடைத்தான கன்மியோகிகளுஞ் செறிலோகபாலருடன் பூதாதிபதிகண், மோகமாங்கன்மபலத் தாலடையப்பட்ட மூதன்மையாம்வைசுவா னராதியாகுஞ், சோகமாமவ்

த்தையாப் பிருதிவிம்பாளுக்குஞ் சொல்சகமேசரீரமதா மாயை விசிட்டருக்கு, மேகமாமான்மாவு மன்னியமாய்த்தேக மிலா மையினலசரீர மெனலாகுமறிவாய். (ருஎ)

அவிகாரம். வேறு.

பிறப்பிறப்பாதியாம் விகாரமுளதனகோசம் பேசிடும் பசிக டாகம் - பெலமுடன்கொடுக்கல்வாங் காதியாம்விகாரமது பி ராணமய கோசமாகுந், துறப்பரியகாமாதி விகாரமுளமனேம யஞ் சுகதுக்க மாதியான - தொடர்விகாரங்களும் விஞ்ஞான கோசமாந் தொடர்ஞான வஞ்ஞானமுஞ், சிறப்பானபிரியமு டன் மோதமாம்பிரமோதந் நிகழ்வதா னந்தமயமாஞ் - செறி பஞ்சகோசங்க ளெல்லாததாயுமிவை சேர்விகா ரவிகாரமு, மற ப்பிலாதறிகின்ற சாட்சியாமான்மாவு மற்றுமொருபொருள்க ளின்றி - மன்னலாலவிகார மெனவுமேயுபநிடத மலர்வாக வ றைவதாமே. (ருஅ)

அத்துவிதம். வேறு.

மரங்கொடிகள்செடிமுத லாவதுகள்பூமியினில் வந்துமே யதிலிருந்தும் - வரமானபூமியி லிறந்துமேயப்பூமி மாத்திர மிருத்தல்போலத், திரமிலாமூவித வவத்தைகளில்வருவதாந் திகழுபிர பஞ்சமெல்லாந் - திடசாட்சிதன்னிடத் துதித்திருந் திறந்துமே திகழ்சாட்சி மாத்திரமதா, யுரமாகமிஞ்சுவத னலு மேதன்னைவிட வொருவஸ்துவேறிலாதா - யொன்றனவான் மாவி ரண்டற்றதாதலி னெப்பிலா வத்துவிதமாம், பரமானவி ருபதுடன் மூன்றுநாமங்களும் பகர்விலக் காகுமிந்நூல் - பார் ப்பவர்களான்மாவி னுருவமதையுற்றுமே பரமவா னந்தம டைவர். (ருகூ)

ஆத்மநாம முற்றிற்று.

உ

சிவமயம்.

பஞ்சகோசம்.

கணபதி வணக்கம்.

திருவுறுகர்னூ புரியினிலெழுந்த திருப்பாகத்தீசுர ரருளாற், பொருவிறன்மார்த்த காமியமோட்சம் பொருந்திடவடியர்க ளதற்கு, மருவுவிக்கினங்க ளியாவையுமகற்ற வந்துறுகெசமுக வடிவா, மொருபொருளாகும் விக்கினேசுரன்றா ளுளத்தினுஞ்சிரத்தினும் வைப்பாம். (௧)

குருவணக்கம்.

ஐயதில்பஞ்சகோச மான்மரூபங்கள்போல
மெய்யதாய்த்தோன்றுமத்தை விலக்கியேயான்மரூபங்
கையிலாமலகம்போலக் கண்டதுநானேயாகச்
செய்தருண்முத்துராம தேசிகேசுரனேபோற்றி. (௨)

நூல்.

ஆகமேதன்னைச்சூழ்ந்த பதார்த்தங்களறிவதாலும்
போகமாமாலைசாந்தம் பொன்பட்டுவனிதையாதி
தேகத்தாற்பலமாய்த்தேக மிலாவிடிற்பலங்களற்றும்
பாகமாந்தேகம்விட்டோர் பரமான்மாவிலாததாலும். (௩)

நானுமேபருத்திளைத்தே னுயர்வென்கையாலு
மானதோரன்னகோச மான்மாவாமென்றுசொல்லி
ஞானமாமரணமூர்ச்சை யுற்றிடும்பொழுதுதன்னை
மானமாய்ச்சூழ்ந்திருந்த வஸ்துவையறியாதாலும். (௪)

அழிவிலாவக்காலத்தி லாகமதிருந்துஞ்சிற்குப்
பழியுறுவனிதையாதி பயன்படாதாதலாலு
மிழிவானபூதத்துள்ளே யிருந்தாட்பெருடன்ருனு
மழிவுறுமப்பூதத்துக் கன்னியமாதல்போலும். (ரு)

பரமாணரதமிழுக்கும் பரியதற்கனியம்போலும்
பெரிதானவுடலையாட்டும் பிராணனுமான்மாவேருய்த்
திரமாகவிருத்தலாலுந் தேகத்திலிருந்துநீங்கு
மருமையாமுயிரதற்கே யன்னியமாவதாலும். (சு)

என்வீடென்மாடென்றே யிங்கிசைப்பவன்வேருமாபோ
லென்றேகம்பருத்திளைத்த தென்கையினுலுமேலா
யுன்னியபஞ்சபூதத் துற்பத்தியாலுந்தேகந்
துன்னியவசத்துமுடன் துக்கமோடணிந்தங்கண்டம். (எ)

வசையதாய்க்கடத்தைப்போல வருதிரிசயமாயாறு
நசைவிகாரங்களுண்டாய் நாமறிபொருளாய்நம்மை
யிசையவையறியாதாலு மிவ்வன்னமயமாங்கோச
மிசையானதானன்றென்று மிகவுமேயறிவாய்மைந்தா. (அ)

நாதனேபிராணனெல்லா நசித்திடுஞ்சுழுத்தியுற்றுஞ்
சாதமாங்காற்றுண்டானற் ருனியமித்தவூருக்
கேதமதறவேநாவா யேகியுங்காற்றில்லாதேற்
சேதமதாகநாவாய் சென்றிடாததுவேபோல. (கூ)

பிராணனுண்டானுன்மாலை பெண்ணணிசாந்தமாதி
பராவியபலனுண்டாயும் பகருழவாதியாரு
யிராநின்றதொழிலுண்டாயு மிலாவிடிலவையின்ருயு
முராநின்றபிராணனீங்கி லுடல்பிணமாகலாலும். (க0)

இதனையலர்கவான்மா வில்லாததாலுநானே
மதவலிவலியிலாதான் மலிபசிதாகமுள்ளா

னிதமானவசனன்றுன னேகினனென்பதாலுஞ்
சதமானபிராணகோசந் தானுன்மாவாகுமென்னில். (கக)

வேறு.

இளர்மகனேமன மானதடங்கிய கேடில்சுழுத்தியுறு
மிளமையதுடலைக் காவல்செய்பிராண னிருக்கவுமூட்டைகடி
யளியுளமூக்க ணியாதிகழற்றிட வறியாதாலுமுறும்
வளமுளகப்பற் பாய்கட்டுந்தொழில் வலவனிலாப்பொழுதே.

அசைவுறுவாயு விருந்தாலும்பல னமையாதவைபோல
வசையுறுமக்காற் சிற்காதிகள்பலன் வாராதாலுமினு
நசையுறுமுழவா தியவறுதொழில்க ணடவாதாலுமுயர்
பிசகறும்யோக மூர்ச்சையுறுங்காற் பிராணனிலாப்பொழுதே.

உடல்பிணமாகா மையினுலும்போ மோரிடமறியாது
திடமுளரதம கிழுத்துச்செல்லுஞ் சேவனடத்தியவ
னடலையதின்றிய தற்கனியம்போ னவிற்றுதலாதியையுஞ்
சடமுளமூச்சுக ளோடுமிடங்க டானிங்கறியாதே. (கச)

ஆகியமனவான் மாநிலைத்தாட்ட வசையும்பிராணனையும்
யூகித்தாட்டிய வவ்வான்மாவே றுறுதலினுலுமிழி
வாகியதேக மெனதென்றறிபவன் வரமாயதற்கயல்போ
லேகுறுமெனதாம் பிராணன்பெலமா யிருக்குதுவில்லைபெலம்.

என்றும்பசியுந் தாகமதுளதிங் கென்வாக்காதிகளு
நன்றுய்வசனு திகள்பணுதென்று நவிற்றுவததனுலும்
பொன்றும்பிராண கோசம்பஞ்ச பூததன்மாத்திரையி
லொன்றும்ரசகுண சமட்டிவியட்டியி லுற்பவமுறலாலும். ( )

அசைவுறுசடந்துக் காதியதாய்நா மறியப்பட்டதுவா
யிசைவுறநம்மை யறியாதாக விருப்பததனுலும்வசை

நசையுறுபிராண மயகோசந்தா னுமலவாமென்றே
வசையறவறிந்தெக் காலும்விலக்கிடு மைந்தாநீயென்றார்.(கள)

குருவேமனந்தான் றேகேந்திரியங் கூறிடுபிராணனையுந்
தெருளாயறிந்து காத்தலினாலுந் திடமாயாட்டுமெவ
னருகாதிருப்பின் சூத்திரக்கயிறுள பாவைகளாடுவதும்
பொருமவனில்லா விடிலாடாது போன்மனதுண்டானால். ()

சிற்காதிகள்பிர யோசனமாயுந் திகழுழவாதிதொழி
னற்காரியமா மியாகாதியதொழி னடந்திடலாலுமியற்
பொற்பாமனதில் லாவிடிலவைகள் பொருந்தாதாலுமுறு
மற்பமிலாமனம் பாவித்தபடியே யாகியவதனாலும். (கக)

இதைவிடவேறுன் மாவொன்றில்லா தாலும்மிசைவுறுநான்
சுதமுறுகாமி குரோதியனென்று சொல்லுவதாலுமடர்
மதமுறுமனமய கோசமதான்மா வாமெனநீசொல்லின்
பதமுளமகனே கேளெனவுரைத்தார் பண்புளகுருமூர்த்தி. ()

வேறு.

புத்திநிச்சயஞ் சித்தமாதியாற் போனகாலையின் மனதிருந் துமே, பத்தியாயொன்றை யறிந்திரட்சியாப் பண்பினாலுமே பாவைக்கூத்ததின், யுத்தியோடுமே தலைமையாகிய வொருவ னேவிடாக் காலத்தாட்டுவோ, னத்தியாயிருந் தாலும்பாவை தா னுடிடாதுபோன் மாலையாதியும். (உக)

பலன்கொடாமையு முழுதலாதியாய்ப் பகருதொழில்களும் யாகமாதியா, நிலவுதொழில்களு நடப்பதின்றியு நிலையதா யொன்றைத் தியானஞ்செய்திடப், புலமதின்றியு மிந்தவூருக் குப் புரவிநடத்திட வேண்டுமென்பதைச், சிலவறிந்திடாச் ச ஞ்சலத்துடன் சேர்சுதந்தர மிலாதிருந்திடும். (உஉ)

சாரதிக்கெச மானன்வேறதாய்ச் சார்ந்திருத்தல்போ னினை த்தலாதியை, நேரதாயறி யாதுபுத்தியா மான்மாநிச்சயித் தே வுகின்றதிற், சேர்நினைதலைச் செய்யுமனதினைச் செலுத்துமான் மாவே றிருப்பதாலுமே, வாரமின்றியென் பிராணனென்பவ ன் வருமதற்குவே றிருத்தல்போலவே. (உ௩)

என்றன்மனதுமே சங்கற்பிக்கிதிங் கிச்சையாதிசெய் தென் றலாலுமே, மன்றன்மனமய கோசம்பஞ்சதன் மாத்ரைசத்துவ குணத்தில்வந்ததா, லொன்றசத்துடன் சடந்துக்காதியா யுற் றுநாமறி பொருளதாய்நமை, நன்றறிந்திடா தாலுமனமய கோசநாமல வென்றுதேறுவாய். (உ௪)

வேறு.

புத்தியுஞ்சஞ்சலமனதை யுறுதியாகப் பொருந்தச்செய்திக பரமாங் காரியத்திற், கத்தாவாய்நிருபவிக்கை யாலும்பாடங் கழறுகின்றவாத்தியா ருள்ளபோது, பத்தியுளசிடர்களிற் றலை வனுலே பாடமதுசொல்லுவித்தல் படித்தல்கூடுஞ், சத்தியுள வவரிலரே லதுகூடாபோற் சார்கின்றபுத்தியதிங் குள்ள பேரதே. (உ௫)

சந்தனங்கள்வனிதாதி பலமதாயுஞ் சார்கின்றவுழவாதி யா கமாதி, பந்தவுபாசனையோக நடப்பதாயும் பலமானபுத்தியின் றே லவைகூடாதாய், நந்தலிலாவிதற்கயலா யான்மாவின்றி நான்புத்திவந்தனென் கர்த்தாவென்னு, மந்தமுளவிஞ்ஞான ம யமாங்கோச மான்மாவாமென்பாயே லதுவுங்கேளாய். (உ௬)

வேறு.

வியாதிமுதலானதாற் பிரியமதிலாக்கால் விபுத்திநிச்சயமிரு ந்தும் - வேருனசலனமுள மனதையொருநிலையிலே. விதியா ம லிகபரத்தின், சயமானகாரியம தொன்றையுஞ்செய்யாது ச ம்பளப் பொன்னிலிச்சை - சற்றுமில்லாவிடிலு பாத்தியாரிரு

க்கினுந் தனையர்கள் படித்தலிலைபோ, னயமானசிற்காதி பய
னதுபடாமலு நலமான வுழவாதியு - நவில்கின்றயாகாதி யுபா
சனையாதிகளு நடவா திருப்பதாலு, மியலானசாரதியை யே
வுஞ்சுதந்தரமி லாதயெச மானனுக்கிங்- கெண்ணுபிரயோசன
மும் வேருயிருத்தல்போ லெழினிச் சயங்கள்செயவே. (உஎ)

தற்சுதந்தரமின்றி யானந்தவான்மா வசைத்தபடி சகநிச்ச
யந் - தருகின்றபுத்திக்கவ் வான்மாவும்வேறதாய்ச் சார்கின்ற
தன்மையாலும், பொற்பாகவென்மனம தென்பவனதற்குப்
புறம்பா யிருத்தல்போலப் - புகலுமென்புத்திநிச் சயஞ்செய்யு
தென்புத்தி புலமற மயங்குதென்று, மற்புதமதானவென் சு
ரோத்ராதிசத்தமுத லறிகின்ற தென்பதாலு - மறிவாம்விஞ்
ஞானமய கோசமும்பஞ்சதன் மாத்திரைச் சத்துவத்தி, லு
ற்பனமதாயசத் தாதியாய்நம்மாலு மூற்றறிவ தாயுநம்மை -
யொருநாளுமறியாத விஞ்ஞானமயகோச மோதிரு மன்று
மைந்தா. (உஅ)

அறிகின்றபுத்திமுத லியாவுஞ்சுழுத்தியி லழிந்துகு ணியஞ்
சுகமுமா - யமர்கின்றதாலுமே சம்பளத்திற்பிரிய மாகிறைற் பி
ரதானியா, னெறியுடையசிமையின் காரியநடக்குத னிகழுவ
ன் பிரியம்விடிலோ - நியமமாய்நடவாமை போலவானந்தம
து நிகழ்பொழுது சிற்காதிகள், செறிகின்றபலமாயு முழவாதி
யாகாதி திகழுபா சனைகளாதி - செறிதொழினடப்பதா யும்பி
ரியமோதமொடு திகழுபிர மோதமுளதாய்க், குறியுடையிவா
னந்த மிலதாகிலிவைகளுங் கூடிடா தாதலாலுங் - குலவுமிவ்
வானந்த மின்றியோரான்மாக் குறிப்பதற் கில்லையாலும்.(உகூ)

வேறு.

நானுறுசுகியஞ்ஞானி நானுமேபிரியனென்னு
மானவானந்தகோச மான்மாவாமென்றுசொல்லி

ஞானமின்மகனேகேளா யொன்றியசுழுத்தியுற்ற
சூனியமஞ்ஞானத்தின் சுகங்களுந்துரியத்தில்லை. (௯௰)

சம்பளந்தான்கொடுக்குந் தரணிபனிலாதபோது
நம்புமந்திரியாற்சீமைக் காரியநடவாதேபோற்
பம்பியபரமானந்தப் பரமான்மசொரூபமன்றி
வம்புசிற்காதியாவும் வரமானபயனளிக்கா. (௯௧)

உழவாதியாகமாதி யுபாசனையாதிகூடா
வழியானபிரியமாதி வரமாட்டாதாதலாலுங்
குழகானரதத்திற்செல்வோன் குறித்துளபலனதற்கிங்
கழகானவதைக்கொடுப்போ னன்னியமாதல்போல. (௯௨)

எழிலபுத்திதொழில்கள்செய்ய வேதுவாம்பிரியத்திற்கு
விழியதிட்டானவான்மா வேறுகவிருப்பதாலுஞ்
சுழுவிலாவென்னஞ்ஞான மென்சுகமென்கையாலு
மழியுமானந்தகோச மவித்தையில்வருவதாலும். (௯௩)

அசமிலாச்சடந்துக்காதி யாகிநாமறிவதாயு
நிசநம்மையறியாதாயு நிகழுமானந்தகோசம்
வசமறநாமன்றென்று வரையறுத்தறிவாய்மைந்தா
நசைபஞ்சகோசநீக்கி னானெவன்சொல்வீரையா. (௯௪)

வேறு.

ஆரோபமாய்ப்பாம்பு தோற்றுங்காலு மதற்குமேமுன்பின்
னு மதிட்டானமாகத், தாரகமாய்த்தானிருந்தங் கதற்குமேயி
ருக்குந் தன்மையதுகொடுக்கின்ற பழுதையதேபோல, வாரம
தாம்பஞ்சகோசந் தோற்றும்பொழுதும் வருமதற்குமுன்பின்
னு மதிட்டானமாகப், பாரமதாந்தானிருந்து மவைகளுக்குமி
ருக்கும் பான்மைகொடுக்கின்றவுண்மையா னானுஞ்சத்தே. ()

வேறு.

தானுமேபிரகாசமதாகியுஞ் சடமதாங்கட்மாதிவிளக்கிடும், பானுபோற்பிரகாசமதாகியே பங்கமின்றியிருந்தைந்துகோசமு, மூனமூன்றுமவத்தைகளியாவையு முற்றுமேபிரகாசங்கள் பண்ணிய, வீனமின்றியவான்மாவறிவுரு வென்றுமாதலாற் சித்தென்றறிகுவாய். (கசு)

வேறு.

தானின்பவடிவமாகித் தனையடைந்தவர்க்குமின்ப
மானதைக்கொடுக்குந்தேவா வமிர்தத்தைப்போலவான்மா
வூனமில்சுகமாய்த்தன்னை யுறும்பஞ்சகோசங்கட்கு
மீனமில்சுகங்கொடுக்கு மின்பத்தாலானந்தந்தான். (கஎ)

ஓதியபூதநான்கி லுயர்ச்சிதாழ்ச்சிகளில்லாம
லேதமிலொருபடித்தா யிருக்கின்றவான்போலான்மாக்
கோதறவவத்தைமூன்றிற் கூடுதல்குறைதலின்றி
நீதியாய்நடுவாயொன்றாய் நிகழ்வதாற்சமமதாமே. (கஅ)

கானனீர்பொய்யாய்த்தோன்றுங் காலத்துமதற்குமுன்னும்
பானுவேபின்னுநிற்கும் பண்புபோற்சரீரமூன்று
மானதுபொய்யாய்த்தோற்று மப்போதுமுன்னும்பின்னு
மேன்மையாமான்மாநிற்றன் மெய்யினாற்றிரமதாமே. (கசு)

வேறு.

சண்டையுற்றிடு வோருடனின்றிடுஞ் சாட்சியாள னவர்செய்தொழில்களில், விண்டுமேபட்ச பாதமதின்றியே விளங்கவற்றை யறிந்திருக்கின்றபோன், மண்டவத்தைகண் மூன்றினுமேயபி மானிமூன்றுடுஞ் செய்யுந்தொழிலினு, மண்டலின்றி யுயர்வுதாழ்வின்றியே யறிந்துநிற்றலிற் சாட்சியதாகுமே.()

வேறு.

கடகலசங்குதிர்முதலா முபாதிகளினாலே ககனமதிங் கனேகமதாய்த் தோற்றினுமேயவைதான், றிடமாகவொன்றல்லால் வேறிலாததுபோற் றிரமானவான்மாவு மவித்தையந்தக்கரணமடர்கின்றவவைமுதலா முபாதியினாலனேக வறிவாகத் தோற்றினுமே யறிவுபலவின்றித், தடமானவொருவடிவா யிருப்பதனால்வேதஞ் சாற்றியதிங்கேகமென வறிந்திடுவாயன்றே.

வேறு.

சத்தலாமனுறுகட்சராவமவை தந்துதோன்றியழிவாயினும்
வித்ததாகியமிருத்துவானவை விளங்கிமுப்பொழுதிருப்பபோ
லெத்ததாகியுளகோசமைந்தது மெழுந்துநின்றழிவதாகவு
நித்தமாகியதனக்குதிப்புட னிறப்பிலாமையினினித்தியம். ()

வேறு.

பூதங்களுன்கதனுள் வியாப்பியமதின்றிப் பொருந்துமவை தன்னுள்ளே வியாப்பியமாயுடைய, வேதமிலாவியாபகமா மாகாயம்போல விழிவானதூலமாந் தேகமுதன்மூன்றும், பேதமாஞ்சாக்ராதி யவத்தைகண்மூன்றினையும் பெறுவிசுவனாதிய பிமானிகண்மூன்றினுக்குட், சாதமிலாவான்மாவும் வியாப்பியமதின்றித் தன்னுளவைவியாப்பியமாய்த் தான்விபுவால் வியாபி. (௩௫)

பழுதைப்பாம்பதுமுன்பின் னடுவுமேயின்றிப் பதார்த்தங்கட்கிருத்தலையுங் கொடாததேபோல, விழிவுளவைங்கோசமது முக்காலுமின்றி யாதுக்குமிருப்புதவா தாதலாலசத்தாம், விழிதலுறுகடந்தானும் விளங்காமலொன்றை விளக்கவுமாட்டாதுபோலைங்கொசங்களுமே, யறிவிலாவான்மாவை யறியாதிங்கவாலைந்தையுமே வெவ்வேறா யறிவதனாற்சடமாம். (௩௬)

தானுமேதுக்கவடிவாயிருந்துவிடமுந் தனைக்கிட்டினவைகளுக்கு மாந்தைகொடுப்பதுபோ, லானியுறுமைங்கோசமாதி

வியாதியதா மரங்ளைதயுற்றுமடுத்ததுவு மவையுறலாற்றுன்பாம்,
வாணுதியொன்றுக்கொன் றுயர்வுதாழ்வாக மருவுதல்போலைங்
கோசங் களுமொன்றுக்கொன்று, தினமுறுமுயர்வுதாழ் வுற்
றுமேயென்றுந் திகழ்பேதமாயுறலால் விசமமாமன்றே. (சரு)

வேறு.

கானலிற்சலமுமுன்பின் கருதிடலின்றிமத்தி
யானதோர்பொழுதும்பொய்யா யமர்வதுபோலவிந்த
வூனமாம்பஞ்சகோச முன்னிடின்முன்பினின்றி
மானமாய்நடுவிற்பொய்யாய் மருவலாலத்திரந்தான். (சகூ)

பிணங்கியேயொன்றுக்கொன்று பேசியவிவாதஞ்செய்வோ
ருணங்கியம்மயமாய்மூழ்கி யுறுவதுபோலநாளு
மிணங்கியபஞ்சகோச மெண்ணிடிலொன்றின்றர்ம
மணங்கியவொன்றிலேற்றி யழுந்தலாற்சாட்டியந்தான். (சஎ)

கடகலசாதிநாநா வாகியேகாணல்போல
வடரஞ்சுகோசநாநா வாதலாலனேகமென்றுந்
தொடர்மணிற்கடங்களாதி தோன்றியேயழிதல்போல
யடர்பரமதனிற்றேன்றி யழிகோசம்மனித்தியந்தான். (சஅ)

விண்ணினுட்பூதநான்கும் வியாப்பியமாதல்போல
நண்ணியகோசமைந்து நாளுமான்மாவினுலே
யெண்ணிடில்வியாபிக்கப்பட் டிருப்பதால்வியாப்யமென்று
பண்ணியல்வேதந்தானும் பகர்ந்ததென்றறிநீமைந்தா. (சகூ)

ஆதலாற்கோசமைந்து மசத்தாதியென்றுநீக்கிச்
சாதமிலான்மாநாளுஞ் சத்தாதிலெட்சணத்தா
லேதமிலதுவேநானென் றெண்ணிநீயறிவாயென்னுஞ்
சோதியாமுத்துராம சுவாமியின்பாதம்போற்றி. (ருய)

பஞ்சகோச முற்றிற்று.

முத்துராமலிங்கதேசிகர் திருவடிவாழ்க.

உ

சிவமயம்.

ஞானவந்தாதி.

செல்வவிநாயகர் துதி.

நித்தியவநித்தியங்க ணிலைபெறவடியர்தங்கள்
புத்தியின்விளங்கிஞானம் பொருந்துதற்காயெழுந்த
சித்ததாங்கண்டநல்லூர்ச் செல்வமாகணேசநாயேன்
வித்தையந்தாதிபாட விவேகவாக்கருள்செய்வாயே. (க)

குருவணக்கம்.

அத்தனேயென்னையாள வருள்வடிவாகவந்த
முத்தனேமுத்துராம முதல்வனேயெளியேனுக்காய்ச்
சுத்தமாமுன்றன்வாக்காற் சொல்லியவாக்கியத்துக்
கத்தமாங்கவியென்வாக்கா லருளுவாய்போற்றிபோற்றி. (உ)

அவையடக்கம்.

போற்றியவுன்றன்வாக்கைப்பொருளதாய்க்கொண்டியானுஞ்
சாற்றியகவிகடன்னிற் றளைமுதலனேககுற்ற
வேற்றுமையிருக்குமாகின் மெய்யடியார்களத்தைத்
தேற்றமாய்ப்பாராதர்த்தந் தெளிவதாய்ப்பார்ப்பார்மெய்யே.()

பாயிர முற்றிற்று.

சருவம் பஞ்சபூதமயமெனல்.

மெய்வடிவாயகண்டமதாய்விமலமாகி வேதங்கட்கெட்டரிதாம்பிரமந்தானே, மையில்பரன்வடிவாகிப்பஞ்சபூத மாமதனுற்பிரமாண்டமாகிதன்னைச், செய்யிரச்சுசர்ப்பம்போற்சிருட்டிசெய்தான் றெளிவாகவதன்வடிவைவிசாரிக்கும்போ, தையன்முனஞ்சருவமுமேபஞ்சபூத மாகுமெனவருள்செய்தான்பவமேநீங்க. (க)

சருவமித்தையெனல்.

பவமானசகங்களதின்சொரூபந்தன்னைப் பார்க்கிலவைசத்துமுதலொன்பதாலு,மவமாகிச்சொல்வடிவாயிருப்பதாலு மனுபவத்திற்சொற்பனம்போலமர்வதாலுந்,தவமுடையபெரியோர்களுபநிடங்கள் சகலமுமேபிராந்தியெனச்சாற்றலாலும், விவரமதாய்ச்சருவமுமேமித்தையென்றே விளம்பியெனையிரட்சித்தான்விபுவாய்நின்றோன். (உ)

சருவஞ்சின்மயமெனல்.

நிற்கின்றசகவடிவையாலோசிக்கி னிகழறிவுக்கன்னியமாயிலாததாலுஞ், சற்பிரமவசிட்டர்பிரமாதியெல்லாஞ் சங்கற்பமாமதுவுமறிவுக்கன்ய,மற்பமுமேயிலையதனாற்சிருட்டியெல்லாமறிவுமயமெனவெகுவாயறைதலாலு, மற்புதமாஞ்சருவமுமேசின்மயந்தா னறிவதனாற்பாரெனவேயருளிச்செய்தான். (ங)

நாமரூபநாடாமலந்தரமுகமாயிருக்க வேண்டுமெனல்.

தானலதாஞ்சகவடிவைவாகியத்திற் சாரிலவைசத்தியமாய்த்துன்பந்தன்னைப், பான்மையதாய்வருவித்துப்பிறப்பிறப்புப் பலகோடிதருவதனாலவையைநீங்கி, மேன்மையுடனாந்தரமாந்

திருட்டிபெற்றால் வேறானவவைநீங்கிச்சித்தேயான, ஞானம
தைத்தருவதனுமருப நாடாதாந்தரநாடச்சொல்லினுறால். ( )

பரிபூரணமானதனக் கேதுவேண்டுவதெல்லாந்
தோற்றமாத்திரமெனல்.

சொல்லரியதன்வடிவிற்றேசங்காலஞ் சொல்வஸ்துபரிச்சே தமிலாததாலு, நல்லதெனச்சொன்மனுடானந்தமாதி நமைமா டிற்றோற்றமதாய்நணுகலாலு, மெல்லையிலாகாயம்போற்பூண்ற வஸ்தா யிருக்குமெனக்கெதுவேண்டுமென்றென்றதன், புல் பரிபூரணமான தனக்குவேண்டிப் பொருந்துவதேயில்லையெ லாந்தோற்றமென்றான். (௩)

அதிட்டானமானதானுய்ப்பார்க்கும்போது
தன்னைத்தவிர நானவனெங்கேயெனல்.

என்றுமேநானவன்றானதுவென்றோரி விலதாகித்தன்வ டிவேமிஞ்சலாலு, நன்றானதுரியமதிற்றன்னையன்றி நானெவ னேமுதலியபொய்யிலாததாலுங், குன்றாதவேதங்களெல்லிட த்துங் குறைவில்பரமாத்துவிதங்கூறலாலுந், தன்றனதிட்டான மதாய்ப்பார்க்கும்போதுதானன்றிநானவனேயுமியாதென்றான்

உபசாந்தமுந் துரியமுமியாதவிடமுந்
துரியமெனல்.

உதிக்கின்றவவத்தையபிமானிதேக முளவரைத்[illegible] ரமாதிநீக்கி, மதிக்கின்றவிருத்தியறிவாகிநின்ற மன்[illegible] சாந்தமதுதுரியமந்தக், கதிக்குதிகரறியாதவிடயத்தன்[illegible] த்தத்வமுதலானநிலாமையாலே, அதிக்கரியவுபசாந்த [illegible] னேயஞ் சொல்லிரண்டுந்துரியமெனவறைந்தானன்றே. (௪)

பாசபந்தம்வரும்போ ததனிவிர்த்தியுந் தோன்றவேண்டுமெனல்.

நாஞானசத்தியசிற்சொரூபந்தன்னைத் தனுவாதிபாசகன்ம மறைக்கும்போது, நானொன்றெண்ணுமிடத்தந்தப்பாச நவை யானவதிலுள்ளசுகதுக்கங்க, ளூனாவுமிலாதுதனதுருவந்தோ ன்றி நவையில்பரமானந்தநணுகலாலே, யூனைபாசபந்தம்வரு கிலப்போ துற்றவதனிவிர்த்தியுமேவேண்டுமென்றார். (அ)

சுகதுக்கமுள்ளவளவாயிற் றாரதன்மிய நீங்காவெனல்.

வேண்டுதலாஞ்சுகதுக்கந்தோன்றுமாயின் விருப்புவெறுப் பதனாலேதாரதன்மியங், காண்டலதனாரக சுவர்க்கமுற்றுங் கன்மவினைநீங்காமலேனகசீவர், மாண்டதனாற்பெரியோர்கள் சுகதுக்கத்தை மருவாமற்சமநிலையின்மகிழ்தலாலே, தாண்ட வொணாச்சுகதுக்கமுள்ளமட்டுந் தாரதன்மியநீங்காதுதவிர்வா யென்றார். (௯)

பிரபஞ்சமித்தையாபாவனையாலுங் காண்பான் காட்சிநீங்குமெனல்.

என்றுமேதன்சொருப நிருணயிக்கினி யானன்றிக்காண்ப தொன்றுமில்லாதாகி, நன்றானபுமானன்றித்தறியேபோலு ந லமானரசிதமன்றிக் கிளிஞ்சில்போலும், பொன்றுவதாங்கா ண்பான்காண் பனவேயின்றிப் பொருளானநித்தபரி பூன்ற மொன்றே, நின்றதனான்மித்தையினிற்காண்பான்காட்சி நிக ழாதுபாரொனவேநிகழ்த்தினரே. (௧0)

பிரபஞ்சந் தன்மயபாவனையாலுங்காண்பான் காட்சிநீங்குமெனல்.

நிகழ்கின்றகாண்பானுங் காட்சிதானு நிதானமதாந்துரியம தேயன்றிவேருய்ப், புகழ்கின்றவாபரணஞ்சுவர்ணம்விட்டும் பொருகின்றவலைதிவலை சலதிவிட்டுந், திகழாதஞாயமெனவி லாததாலே திகழ்முத்துராமையன்றிவ்யவாக்காற், புகழானத ன்மயத்திற் காண்பான்காட்சி பொருளாகவிலதாகி நீங்குமெ ன்ருன். (௧௧)

எல்லாமறியப்பட்டதன்னை யொன்ருலு மறியப்படாதாகக்காண்கின்றதே பிரத்தியக்க ஞானமெனல்.

நீங்குகின்றசரீரமுதன்மாயையீருய் நிகழ்தத்வமுப்பதைந்து ந்தானேகண்டு, பாங்காகநீங்குதலாலதனையெல்லாம் பரமாக வறிகின்றதன்னையொன்று, மீங்கெதுவுங்காண்குதெனச் சுரு தியுத்தி யிலதாகித்தான்சுகமாய்விளங்கலாலே, யாங்கெதுங் காண்கின்றதனையொன்றுங்காணு தாய்க்காணல்பிரத்தியக்க ஞானமென்ருர். (௧௨)

தன்னிடத்தி லகங்காரம் பிராந்திமூலப் பிரமையெனல்.

ஞானமதாய்விகாரமிலா தென்றுமுள்ள நல்வடிவாமகண் டேகசொருபந்தன்னி, னீனமதாமகங்காரம்பிராந்தியாலே யி ருப்பதுபோற்ருேன்றுவதே யன்றியில்லை, மோனமதாமனுப வத்திலகங்காராதி முற்றுமிறந்ததிட்டானம்விளங்கலாலே,மா னமுருத்தன்னிடத்தி லகங்காரந்தான் மயக்கமதேகாரணமா ய்வருவதென்ருர். (௧௩)

இங்கையுமங்கையு மிராகத்துவேடமன்றியிலிருந்தா லிரண்டுக்கு மயிக்கியமெனல்.

வருகின்றராகத்துவேடநீக்கின் வானம்போற்பேதமிலாத பேதமாக, மருவுவதாலிங்கிதெனுமங்கிதென்னு மாசின்றியயிக்கியமேமருவலாகு, மருமையதாய்ச்சிகித்துவசன்றன்னைத்தேவ ரழைக்கும்போதபேதமதாயருள்வதாலே, யுரிமையுடனிங்கங்குமிராகத்துவேட மொழிவதுவெயயிக்யமென வுரைத்தானையன். (கச)

பிரத்திட்சவிடயமு மப்பிரதிட்சவிடயமுந் திருக்குவாகிய ஞானத்திற்குத் திரிசயமெனல்.

ஐயமுதற்றடைநீங்கிற்றன்சொரூப மறிவாகியெவ்விடத்து மமர்வதாலே, மையானவண்டபகிரண்டமெல்லா மருவுகின்ற தனக்கெதுவுந்திரிசியமாகுந், தொய்தமதாஞேயமறிந் தறியாதாகத் தோன்றுவதுமனமாதிக்காவதாலே, யையனுமேயறிந் தறியாவிடயந்தானு மறிவதனிற்றிரிசயமாய்த் தோன்றுமென்றார். (கரு)

வஸ்துநிண்ணயத்திற் பிரபஞ்சந் தானல்லவெனல்.

தோன்றுதலாமகமிதமாஞ்சிருட்டிமுன்பு தோன்றாதுசுசாதிகமாதியின்றிச், சான்றானசத்தியசிற்சுகமாம்வஸ்துத் தான் மாத்திரம்விளங்குதலாற்சகசிவாதி, மான்றல்வடிவாதலினாற்றிரிகாலத்து மருவாதுவஸ்தொன்றேமருவலாலே, யான்றவஸ்துநிருணயத்திற்பிரபஞ்சந்தா னலவென்றுமையனுமேயாரொன்றாரே. (கசா)

அத்துவிதத்திற் றன்னைத்தவிர வேறல்லாதபடியினுற் றானேயெனல்.

பார்க்கரியதன்மயமாந்திஷ்டிதன்னிற் பரசிவசகங்களென வறிவில்வேருய்த், திர்க்கமறாயிலாதுபடநூலைப்போலுந் திகழ்கடமண்ணதுபோலுந்திகழ்தலாலே, யார்க்குமுயர்வானமுந்துராமலிங்க வையனெனக்கழருள்ளதிஷ்டியான, மார்க்கமதாமத்துவிதந் தனில்வேருக மருவாதுசகந்தாளுய் மருவுமென்றூர். (௧௭)

சோகத்தால்வருந் துன்பமோகத்தாற் சுகம்போற்காட்டுமெனல்.

என்றுமேசோகமதாஞ்சமுசாரத்தி னெண்ணரியதுன்பமெலாமோகத்தாலே, நன்றிதெனப்பன்றியுமே யமேத்தியத்தில்ரமிப்பதுபோல்ரமிக்கின்றமூடர்க்கென்றுந், துன்றரிதுஞானமெனவிவேகியானேன் ருடர்பானசமுசாரந்தொலைத்தற்காகக், கன்றுவதாஞ்சோகமடைதலினுற்றுன்பங் கனமானமோகத்தாற்சுகம்பாரென்றூர். (௧௮)

இத்தனையுமாயாமயமல்லோ வுள்ளபடிமுடியுமெனல்.

பார்க்கின்றசகத்தெல்லாம்பொதுவேயாகப் பரணியமித்திருக்கவறிவறிவிலோர்கண், மூர்க்கமதாய்க்கிட்டாதைவேண்டுமென்று முயலுதலாற்றுன்பமதேயடைவர்ஞானி, திர்க்கமுடனித்தனையுமாயையாலே திடமாகவுளதுவருமென்னல்கொண்டு, மார்க்கமதாயித்தனையுமாயையாக மருவுதலாலுளதுவருங்காண்பாயென்றூர். (௧௯)

திரிசயந்திருக்கைவிட்டுத் தோன்றுதெனல்.

காண்கின்றவுருநாமஞ்சத்துச்சித்துக் கனமானவானந்தமை ந்துஞ்சேர்ந்து, மாண்பாகத்திரிசயமாய்த்தோன்றினு மயனு மருபஞ்சத்தாதிவிட்டு, வேண்பாகயிலாமையினாற் பிரமனாதி யெல்லாமுந்திருக்கைவிடத்தோன்றுதாலே, பூண்கின்றதிரிச யமுந்திருக்கைவிட்டுப் பொருந்துவதேயில்லையெனப்புகன்று னன்றே. (உ0)

அதிட்டானத்தைத்தவிர வாரோபத்துக்கு வடிவமில்லாதபடியா லெல்லா மதிட்டானமயந்தானெனல்.

ஆனதனில்விளங்குகின்றசரீரமாதி யறிவதனில்விவர்த்தம தாய்த்தோன்றலாலே, வானதனிற்கந்தருவநகரம்போலும் வ ளர்கானனீர்போலுமருவப்பட்ட, தானசகந்தன்மயமாம்திஷ் டிதன்னி லயலாகாதறிவுமயமாதலாலே, ஞானமதாமதிட்டா னமன்றியொன்று நணுகாதிங்கதிட்டானமெல்லாமென்றார்.

இந்திரசாலக்காரனிடத்திற் கந்தருவநகரந்தோன்றி நில்லாதழிதல்போற் றன்னிடத்திலுண்டான சங்கற்பமெவளவோவந்து மொன்று நிற்கவில்லையெனல்.

எல்லாமாம்வஸ்துவினிற்சிருட்டியான வீசன்முதற்றிரணம் வரையொன்றும்வேறாய், நில்லாமற்சொற்பனத்தில்வந்ததெல் லா நிகழ்புருடனொழியவொன்றுமிலாததேபோற், பொல்லாத சங்கற்பமயமாய்த்தோன்றிப் பொன்றினதோரளவில்லையாத லாலே, சொல்லானகந்தருவநகர்போற்றன்னிற் றோன்றினச ங்கற்பங்களில்லையென்றார். (உஉ)

உபசாந்தமானலுந் தன்மயமானலுஞ் சகலத்தியாகந்தாமெனனல்.

இல்லையெனப்புந்தியினிற்சகத்தைநீக்கி யெள்ளளவுமாசை யுருநிராசைபெற்றுச், சொல்பிரமாப்பியாசமதுசெய்யச்செய்ய த் தோன்றுவதாமுபசாந்தமாதலாலும், புல்லரியதன்மயத்திற் றனக்குவேருய்ப் பொருந்துபொருளொன்றுமிலையாதலாலு, மெல்லையிலாவுபசாந்தந்தன்மயங்க ளிருவகையுஞ்சகலம்விட் டதாகுமென்ருர். (உ௩)

நிவிர்த்தியாயிருக்கவேண்டுமல்லது நாமரூபநாட்டம்வந்தா லத்துவிதமாய்ப் பார்க்கவேண்டுமெனல்.

